வரலாற்றை அரசியலுக்காக மாற்ற வேண்டாம்! தமிழ்நாட்டின் தனித்துவத்தை மழுங்கடிக்க வேண்டாம்!

தமிழ்நாடு நாள் - ஜூலை 18 மட்டுமே ! நவ.1-ஐப் போற்றுவோம் !

தி.மு.க. தலைமைக் கழகம் அறிக்கை!

சென்னை, நவ. 3 –

“வரலாற்றை அரசியலுக்காக மாற்ற வேண்டாம்” தமிழ்நாட்டின் தனித்துவத்தை மழுங்கடிக்க வேண்டாம். தமிழ்நாடு நாள் ஜூலை 18 மட்டுமே! நவ.1ஐப்போற்றுவோம் என்று தி.மு.க. தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு நாள் ஜூலை 18 மட்டுமே!

நவம்பர் 1 எல்லைப் போராட்டத் தியாகிகள் நாள்! வரலாற்றை மாற்ற வேண்டாம். தமிழ்நாட்டின் தனித்துவத்தை மழுங்கடிக்க வேண்டாம்!

நவம்பர் 1-ஆம் நாளைத் ‘தமிழ்நாடு நாள்’ எனக் குறிப்பிட்டு ஆட்சியாளர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

நவம்பர் 1 கொண்டாட்டத்திற்கு உரிய நாளா? நிச்சயமாக ஆம். ஆனால், தமிழ்நாட்டின் மொழி, இன, பண்பாட்டு அடையாளத்தைப் போற்றும் தனித்துவமான ‘தமிழ்நாடு நாள்’ அதுதானா? என்பதே அடிப்படையான கேள்வி.

இது வெறும் தேதியைப் பற்றிய விவாதமல்ல. தமிழ்நாட்டின் வரலாற்றையும் பண்பாட்டு அடையாளத்தையும் எவ்வாறு புரிந்துகொள்கிறோம், எதிர்காலத் தலைமுறைக்கு எத்தகைய வரலாற்று உணர்வைக் கடத்துகிறோம் என்பதற்கான விவாதம்.

1956 நவ.1ஆம் நாள்
மொழிவாரி மாநிலம்!

இந்திய விடுதலைக்குப் பின்னர் மொழிவாரி மாநிலங்களுக்கான கோரிக்கைகள் வலுப்பெற்றன. தனி ஆந்திர மாநிலத்திற்காக உண்ணாவிரதம் இருந்து 1952 டிசம்பர் 15-ஆம் நாள் பொட்டி ஸ்ரீராமுலு உயிர்நீத்தார். தொடர்ந்து எழுந்த போராட்டங்களால் 1953 இல் ஆந்திர மாநிலம் உருவானது. 1956 நவம்பர் 1ஆம் நாள் மொழிவாரி மாநில மறுசீரமைப்பு நடைமுறைக்கு வந்தது.

இதனால் சென்னை மாநிலத்தின் எல்லைகள் மறுவரையறை செய்யப்பட்டன. ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் எல்லைகள் புதிய வடிவம் பெற்றன.

‘வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்’ என்று தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் போற்றிய தமிழ்மொழியின் வரலாற்றுப் பரப்பையும், 1956 இல் வரையறுக்கப்பட்ட அரசியல் எல்லைகளையும் ஒன்றாகக் கருதிவிட முடியாது.

நவ.1– எல்லைப் போராட்ட தியாகிகள் நாள்!



மொழிவாரி மறுசீரமைப்பின்போது தமிழர்கள் உரிமை கோரிய சில பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணையவில்லை. அதேவேளையில் கன்னியாகுமரி உள்ளிட்ட தமிழர்கள் வாழ்ந்த பகுதிகள் பெரும் போராட்டங்களுக்குப் பின்னர் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டன.

இந்த எல்லைப் போராட்டங்கள் வெறும் நிலப்பரப்புக்கானவை அல்ல. மொழியுரிமை, அடையாளம், மக்களின் விருப்பம் ஆகியவற்றுக்கான போராட்டங்கள். உயிர்நீத்தவர்களையும், சிறை சென்றவர்களையும், வாழ்நாளை அர்ப்பணித்தவர்களையும் நன்றியுடன் நினைவுகூர வேண்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் தான் நவம்பர் 1 எல்லைப் போராட்டத் தியாகிகள் நாள்.

அண்டை மாநில மக்களின் மொழியுரிமையை மதிப்பதும் நமது மொழியுரிமையை நிலைநாட்டுவதும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல.

தமிழ்நாடு என்ற பெயர்
எளிதாகக் கிடைத்துவிடவில்லை!

ஆனால், மொழிவாரி மாநிலங்களின் எல்லைகள் மறுவரையறை செய்யப்பட்ட நாளும், ‘தமிழ்நாடு’ என்ற பெயருக்காகத் தமிழர்கள் மேற்கொண்ட நீண்ட போராட்டம் வெற்றி பெற்ற நாளும் ஒன்றா?

நிச்சயமாக இல்லை.

தமிழ்நாடு என்ற பெயர் நமக்கு எளிதாகக் கிடைத்துவிடவில்லை.

‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்ற பெயரை மாற்றித் தமிழர்களின் மொழிக்கும் பண்பாட்டிற்கும் உரிய ‘தமிழ்நாடு’ என்ற பெயரைச் சூட்ட வேண்டும் என்று தமிழறிஞர்களும் அரசியல் இயக்கங்களும் போராடின.

அந்தக் கோரிக்கைக்காக 1956 ஆம் ஆண்டு 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து அக்டோபர் 13-ஆம் நாள் உயிர்நீத்தார் தியாகி சங்கரலிங்கனார். ம.பொ.சிவஞானம் உள்ளிட்ட தமிழுணர்வாளர்களும் பல்வேறு இயக்கங்களும் இக்கோரிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்தனர்.

பேரறிஞர் அண்ணா தலைமையில்
‘தமிழ்நாடு’ பெயர் மாற்றத்தீர்மானம்!

அந்த நீண்ட போராட்டத்தின் வரலாற்றுத் திருப்புமுனையாக, 1967 ஜூலை 18-ஆம் நாள் பேரறிஞர் அண்ணா தலைமையிலான சட்டப்பேரவை, சென்னை மாநிலத்தின் பெயரைத் ‘தமிழ்நாடு’ என்று மாற்றுவதற்கான தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது. தொடர்ந்து சட்ட நடைமுறைகள் நிறைவேறி, 1969 ஜனவரி 14 முதல் ‘தமிழ்நாடு’ என்ற பெயர் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது.

வரலாற்று பெருமிதத்தின்
நாள் ஜூலை – 18

ஜூலை 18 ஒரு கட்சியின் ஆட்சிச் சாதனையை மட்டும் குறிக்கும் நாளல்ல. சங்கரலிங்கனாரின் உயிர்த்தியாகத்திற்கும், தமிழறிஞர்களின் போராட்டத்திற்கும், தமிழ் மக்களின் மொழி உணர்விற்கும், பேரறிஞர் அண்ணாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் முன்னெடுப்பிற்கும் கிடைத்த அங்கீகாரத்தின் நாள்.

தமிழ்நாடு என்ற பெயரைத் தமிழர்கள் தங்கள் அரசியல் அடையாளமாக நிலைநிறுத்திய வரலாற்றுப் பெருமிதத்தின் நாள் ஜூலை 18.

சாலமன் பாப்பையா குழுவின்
பண்பாட்டுக் கோரிக்கை!

இந்த வேறுபாட்டை உணர்ந்துதான் 2021 அக்டோபரில் பேராசிரியர் சாலமன் பாப்பையா தலைமையிலான தமிழறிஞர்களும் மொழி, பண்பாட்டு ஆர்வலர்களும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து, ஜூலை 18-ஐத் தமிழ்நாடு நாளாக அறிவிக்க வலியுறுத்தினர்.

அது ஒரு கட்சிக்கான கோரிக்கை அல்ல; தமிழ்நாட்டின் தனித்துவமான வரலாற்று அடையாளத்தைப் பாதுகாக்க முன்வைக்கப்பட்ட பண்பாட்டுக் கோரிக்கை.

அதனை ஏற்று, 2021 அக்டோபர் 30-ஆம் நாள் ஜூலை 18 தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அதேவேளையில், நவம்பர் 1 ஐ எல்லைப் போராட்டத்தியாகிகள் நாளாக நினைவுகூர்ந்து, அப்போது வாழ்ந்த 110 எல்லைப் போராட்ட வீரர்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாய் பொற்கிழி வழங்கவும் அறிவிக்கப்பட்டு, அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

ஜூலை 18-ஐத் தமிழ்நாடு நாளாக அறிவித்தது நவம்பர் 1-இன் வரலாற்றை மறுப்பதற்கல்ல. இரு நாட்களின் தனித்துவமான வரலாற்று முக்கியத்துவத்தையும் போற்றுவதற்காகத்தான்.

எந்த வகையில் பொருத்தமாகும்?

இந்நிலையில், மீண்டும் நவம்பர் 1-ஐயும் தமிழ்நாடு நாள் என்று கொண்டாடுவது எந்த வகையில் பொருத்தமானது?

இரண்டு நாட்களையும் கொண்டாடுவதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால், வெவ்வேறு வரலாற்று நிகழ்வுகளை ஒரே பெயரில் கொண்டாடும்போது அவற்றின் தனித்துவம் மங்கிவிடும்.

மொழிவாரி மாநில மறுசீரமைப்பின் வரலாறு ஒன்று. தமிழ்நாடு என்ற பெயரைப் பெற்ற உரிமைப் போராட்டத்தின் வரலாறு மற்றொன்று.

பேரறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெயர் மாற்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதற்காக, அந்த வரலாற்றை ஒரு கட்சியின் வெற்றியாக மட்டும் குறுக்கிவிடக் கூடாது. அரசியல் வேறுபாடுகளுக்காக அதன் முக்கியத்துவத்தைக் குறைப்பதும் சரியல்ல.

தமிழ்நாடு என்ற பெயர்
தமிழ்மக்களுக்கு சொந்தமானது!

பேரறிஞர் அண்ணாவின் வரலாற்றுச் சாதனை ஒரு கட்சியின் வரலாற்றில் இடம்பெற்றிருக்கலாம்; ஆனால் ‘தமிழ்நாடு’ என்ற பெயர் தமிழ் மக்கள் அனைவருக்கும் சொந்தமானது. இதனை அரசியல் போட்டிக்குள் அடக்குவது தமிழ்நாட்டின் பொதுவான பண்பாட்டு நினைவிற்கு நியாயம் செய்வதாகாது.

தமிழ்நாட்டின் தனித்துவத்தை மழுங்கடிக்க வேண்டுமென்றே இத்தகைய முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்று ஆதாரமின்றிக் குற்றஞ்சாட்ட வேண்டியதில்லை. ஆனால், அவற்றால் ஏற்படக்கூடிய பண்பாட்டு விளைவுகள் குறித்து எச்சரிப்பது நமது கடமை.

மொழியின் அடையாளம் வெறும் பெயர்ப் பலகையில் இருப்பதல்ல. அதன் பின்னால் வரலாறும் தியாகமும் மக்களின் உரிமை உணர்வும் இருக்கின்றன. அவற்றை அடுத்த தலைமுறை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, நமது கோரிக்கை எளிமையானது. உறுதியானது.

நவம்பர் 1 – மொழிவாரி மாநில மறுசீரமைப்பையும் எல்லைப் போராட்டத் தியாகிகளையும் நினைவுகூரும் நாள்.

ஜூலை 18 – தமிழ்நாட்டின் மொழி, வரலாறு, பண்பாடு, தனித்துவமான அரசியல் அடையாளம் ஆகியவற்றைப் போற்றும் தமிழ்நாடு நாள்.

இது ஒரு கட்சியை ஆதரிப்பதற்கோ மற்றொரு கட்சியை எதிர்ப்பதற்கோ அல்ல; தமிழ்நாட்டின் வரலாற்று அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான நிலைப்பாடு.

தமிழ்நாட்டின் பெயருக்காக உயிர்நீத்த சங்கரலிங்கனாரையும், போராடிய தமிழுணர்வாளர்களையும், பெயர் மாற்றத் தீர்மானத்தை நிறைவேற்றிய பேரறிஞர் அண்ணாவையும் நினைவுகூரும் நாளை உரிய இடத்தில் நிலைநிறுத்துவோம்.

நவம்பர் 1-ஐப் போற்றுவோம்; ஜூலை 18-இன் தனித்துவத்தை விட்டுக்கொடுக்க மாட்டோம்!

வரலாற்றை அரசியலுக்காக மாற்ற வேண்டாம். தமிழ்நாட்டின் தனித்துவத்தை மழுங்கடிக்க வேண்டாம்!

தமிழ்நாடு நாள் - ஜூலை 18 மட்டுமே!

தமிழ்நாடு வாழ்க! தமிழ் வாழ்க!

இவ்வாறு தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

லஞ்சம் கொடுப்பதும் கொடுக்க முயல்வதும் குற்றம்தானே?

அமைச்சர் ராஜ்மோகன் இதுவரை புகார் தராதது ஏன்?

தி.மு.கழக ஐ.டி. பிரிவு கேள்வி!

சென்னை, நவ. 3 -

லஞ்சம் கொடுப்பதும் கொடுக்க முயல்வதும் கிரிமினல் குற்றம் என்கிறபோது, தம்மிடம் லஞ்சம் கொடுக்க வந்தவர் பற்றி இதுவரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையிடம் இதுவரை எந்தப் புகாரும் அமைச்சர் ராஜ்மோகன் அளிக்காதது ஏன் என்று தி.மு.கழக ஐ.டி. பிரிவு கேள்வி எழுப்பியுள்ளது.

இதுகுறித்து தி.மு.க. ஐ.டி.விங் ட்விட்டர் பதிவு வருமாறு:

த.வெ.க புரோக்கர்கள்!

த.வெ.க கட்சியின் Emcee ராஜ்மோகனுக்கு யாரோ ஒருவர், சைடு வாத்தியம் லயோலா மணி மூலமாக லஞ்சம் கொடுக்க முயன்றார் என்றால், அந்த லஞ்சப் பேரத்தை அமைச்சரிடம் கொண்டு சென்ற லயோலா மணி ஒரு புரோக்கர் தானே, அதாவது சட்டப்படி ஒரு ‘கூட்டுச் சதிகாரர்’ (Co-conspirator) ஆகிறார் தானே. உண்மையான குற்றவாளிக்காக அமைச்சரிடம் லஞ்சப் பேரம் பேசியதே இந்த மணிதான் அல்லவா?



ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி லஞ்சம் கொடுப்பதும், கொடுக்க முயல்வதும் கிரிமினல் குற்றம்தானே! அரசுப் பொறுப்பில் உள்ள லயோலா மணியோ அல்லது அமைச்சர் ராஜ்மோகனோ இதுகுறித்து ஏன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையிடம் (DVAC) இதுவரை எந்தப் புகாரும் அளிக்கவில்லை?

லஞ்சம் கொடுக்க வந்த அந்த உண்மையான குற்றவாளியை அமைச்சரும், லயோலா மணியும் இன்னமும் பாதுகாத்துப் பதுக்குவது ஏன்? ஏதாவது Party Fund கட்டிங் வாங்கியதால் தானா?

இதை அவரே தன் வாயால் ஒப்புக் கொண்ட நிலையில், லஞ்ச ஒழிப்புத்துறை இனியும் வேடிக்கை பார்க்காமல் தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கியிருக்க வேண்டாமா? யாருக்கு பயந்து கண் காது அனைத்தையும் மூடி உள்ளது?

இவ்வாறு ஐ.டி.விங் குறிப்பிட்டுள்ளது.

நம் தமிழ் நிலத்தைப் பாதுகாத்த எல்லைப் போராட்ட தியாகிகள் வழியில்

மாநிலத்தையும் மாநில உரிமைகளையும் காத்து நிற்போம்!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!

சென்னை, நவ. 3 -

நம் தமிழ் நிலத்தைப் பாதுகாத்த எல்லைப் போராட்ட தியாகிகள் வழியில் மாநிலத்தையும் மாநில உரிமைகளையும் காத்து நிற்போம்! என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

அவரது பதிவு வருமாறு:

தமிழ்நாட்டின் இன்றைய நிலப் பரப்பை உறுதி செய்ய போராடிய எல்லைப் போராட்ட தியாகிகளுக்கு என் வீரவணக்கத்தை செலுத்துகிறேன்.

எல்லைப்போராட்டத்தில் பங்கேற்று சிறைசென்ற 110 தியாகிகளுக்கு 1 லட்சம் ரூபாய் பொற்கிழி வழங்கி சிறப்பித்தது நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு.

நம் தமிழ் நிலத்தை பாதுகாத்த எல்லைப்போராட்ட தியாகிகளைப் போற்றுவோம். அவர்கள் வழியில் மாநிலத்தையும் - மாநில உரிமைகளையும் காத்து நிற்போம்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அமைக்கப்பட்டுள்ள, முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையிலான கழக மறுசீரமைப்புக் குழுவுடன், கழக இளைஞர் அணியின் ஆலோசனைக் கூட்டம், சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கழக இளைஞர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று, கழக இளைஞர் அணி இதுவரை ஆற்றியுள்ள பணிகள் குறித்தும், இனி மேற்கொள்ளவுள்ள செயல்பாடுகள் குறித்தும் விளக்கினார். மாநில இளைரணி துணைச் செயலாளர்கள் தூத்துக்குடி எஸ்.ஜோயல், இன்பா ஏ.என். ரகு, இளையராஜா, கே.இ. பிரகாஷ், அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், பி.எஸ். ஸ்ரீனிவாசன், ஜி.பி. ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் பங்கேற்று தங்களது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர். மறுசீரமைப்புக் குழுவின் சார்பில் கீதா ஜீவன், அர. சக்கரபாணி, எம்.எம். அப்துல்லா, எஸ்.கே.பி. கருணா, டாக்டர் எழிலன், முரசொலி எம்.பி., தமிழரசி ரவிக்குமார், இ. பரந்தாமன் ஆகியோர் பங்கேற்று, இளைஞர் அணியினரின் கருத்துகளைக் கேட்டறிந்தனர்.



தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தொழிலாளர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் கே. தீன தயாளன் மகன் டி. சதீஷ்குமார் – எம்.அபிநயா சக்தி ஆகியோரின் திருமண வரவேற்பு விழாவில் தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தொழிலாளர் முன்னேற்ற சங்க மாநில தலைவருமான பூச்சி எஸ்.முருகன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். நிகழ்ச்சியில் அசோக் குமார், கிரி குமார், சீனிவாசன், குமார், தேவராஜ், சிவகுமார், தர்மராஜ், சிவானந்தம் மற்றும் தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.